1969 மார்ச் 10]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

Destitute children.

*257 *Q.*—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Health and Harijan Welfare be pleased to state whether any survey has been undertaken in recent times on the question of destitute children in this State ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது குறித்து அரசாங்கம் அளவை எதும் நடத்தவில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர் : அனுதைச் சிறுவரகத்தில் பெருவாரியாக பிச்சையெடுப்பவர்களுடைய குழந்தைகள் சேர்க்கப்பட்டு வருவதால் இதை நன்ருக ஆய்ந்து, உண்மையான அனுதைகளுக்கு இந்த அகத்தில் இடம் கொடுக்கப்பட்டு நல்ல முறையில் நடத்துவதற்கு இந்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : எத்தனை அனுதைக் குழந்தைகள் இருக்கின்றனர் என்பதைப்பற்றி அரசாங்கம் கணக்கு எடுத்ததா என்ற மூலக் கேள்விக்கு அரசாங்கம் கணக்கெடுக்கவில்லை என்று கூறினேன். ஆயினும் மெட்ரூஸ் ஸ்கூல் ஆப் சோஷியல் ஒர்க் சங்கத்தினரும், சேலத்தில் இருக்கும் போலீஸ் ரிசர்ச் ஸ்தாபனத்தினரும் கணக்கெடுத்திருக்கிருர்கள். பெரும்பாலான குழந்தைகள் தாய்—தகப்பனுக்கிடையே ஏற்படுகின்ற சிக்கல்களின் விளைவாக விடப்படுகின்ற குழந்தைகளாக இருக்கின்றனர். தவறு செய்யும் இயல்புடைய குழந்தைகளும் பிச்சையெடுக்கக்கூடிய நிலையில் இருக்கின்றனர். இப்படி பல்வேறுபட்ட குழந்தைகள் அனுதை இல்லங்களில் இருக்கின்றனர்.

திரு. டி. மார்டின் : தமிழகத்தில் அனுதைச் சிறுவர்களுக்கான இல்லங்கள் பெரும்பாலும் ஏராளமாக கிறிஸ்தவ பாதிரிமார்களாலும், கன்னியர்களாலும் தான் நடத்தப்படுகின்றன. நெல்லை மாவட்டத்தில் நாங்குநேரி தாலுக்காவில், அணைக்கரை என்ற இடத்தில் ஏழைப் பெண்களுக்கான ஒரு அனுதை இல்லமும், புளியம்பட்டியில் ஒரு அனுதை இல்லமும் நடைபெற்று வருகின்றன. கடந்த இரண்டு ஆண்டுகளாக அதை ரெகக்னிஷன் செய்ய வேண்டுமென்று மனுச் செய்தும் இதுவரை ரெகக்னிஷன் கொடுக்காத காரணத்தால் ஏழை அனுதை மாணவர்கள் அவதிக்குள்ளாகியிருக்கிருர்கள் என்பதை மனதில் கொண்டு அந்த அனுதை இல்லங்களுக்கு ரெகக்னிஷன் வழங்க சர்க்கார் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது முதலில் எழுப்பப்பட்ட கேள்விக்கு தொடர்பில்லாத கேள்வியாக இருந்தாலும், தனியார் நடத்தும் அனுதை இல்லங்களுக்கு அரசாங்கம் நிதிநிலைமைக்குத் தகுந்தவாறு அவ்வப்போது மானியம் கொடுத்துக் கொண்டுதான் வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட இல்லங்களைப் பற்றி அரசாங்கத்திற்குத் தகவல் வந்திருக்குமானுல் தகுந்த நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது.

திரு. கே. போஜன் : நம்முடைய மாநிலத்தில் அரசாங்கமே அனுதைக் குழந்தைகளுக்கான இல்லங்களை நடத்துகின்றதா ? அப்படியானுல், எத்தனை ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பல நல்லெண்ணம் படைத்த சங்கத்தைச் சேர்ந்தவர்கள், குறிப்பாக மக்களுக்குச் சேவை செய்ய வேண்டுமென்ற மனம் படைத்த பெரியவர்கள் நடத்தும் அனுதை இல்லங்களுக்கு அரசாங்கம் மானியம் கொடுத்து வருகிறது. அரசாங்கமே எதையும் நடத்தவில்லை.

திரு சா. மெய்யப்பன் : நடைமுறையில் மதப் பிரசாரத்திற்காக இதை ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்ற நிலையில் இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திரு'மதி) சத்தியவாணிமுத்து : அவ்வாறு தவருன முறையில் குழந்தைகளை ஈர்த்துச் செல்வதாக அரசாங்கத்திற்கு தகவல் எதுவும் வரவில்லை.

திரு. கே. பி. எஸ். மணி : அனுதைப் பிள்ளைகளை, ஆங்காங்கு பிச்சையெடுத்துக் கொண்டிருக்கின்ற பிள்ளைகளையெல்லாம் பிடித்து வந்து அவர்களுக்காக தமிழக அரசே ஒரு அனுதை இல்லத்தை ஆரம்பித்து நடத்துவதற்கு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அப்பேர்ப்பட்ட செயற்குறிப்பு இனிதான் உருவாக வேண்டும்.

திரு. கே. என். குமாரசாமி : தனிப்பட்டவர்கள் நடத்தும் அனுதை இல்லங்களுக்கு அரசாங்கம் மானியம் கொடுக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அரசாங்கத்தால் மானியம் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. என். ராஜாங்கம் : தாய் தந்தையர் இருவரும் இல்லாவிட்டா லும் தாய் அல்லது தந்தை ஆகிய இருவரில் ஒருவர் இல்லாவிட்டாலும் அல்லது இருவரும் இருந்து எந்த வகையிலும் வாழ வழி இல்லாவிட்டா லும் உள்ள நிலைமைகளில், இந்த மூன்றில் எந்தப் பிரிவினர் அனுதைக் குழந்தைகளாகக் கருதப்படுகின்றனர் ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : காப்பாற்று வாரற்று இருக்கின்ற குழந்தைகள் யாராக இருந்தாலும் அந்தக் குழந் தைகள் எல்லாம் அனுதைக் குழந்தைகளாகத்தான் கருதப்படுகிருர்கள். பெரும்பாலான குழந்தைகள் தாய் தந்தை இல்லாமல் தான் இருக்கி ருர்கள். பொதுவாக ஏழை மக்களுடைய குழந்தைகளும் பராமரிக்கப்படக் கூடிய நிலையில் இல்லாத அவர்களும் இவ்வாறு பராமரிக்கப்படு கிருர்கள்

THIRU K. VINAYAKAM : The problem of destitute children is a menace to the society.

அந்த கதியற்ற பிள்ளைகளை மெட்ருஸ் ஸ்டேட் போலீஸ் ஆக்டின் கீழ் ஒரு சிலரை மாத்திரம் ஜுவினைல் கோர்ட்டுக்கு கொண்டு சென்று டெஸ்டிடியூட் ஹோமுக்கு அனுப்புகிருர்கள். அது சீரிய காரியமாக இருப்பினும் கூட, சட்டத்திற்குக் கீழே வராத பல பிள்ளைகளையும் நம் முடைய தெருக்களிலே பார்க்கிருேம். ஆகவே, இந்தப் பிரச்சினையை முக்கியமாகத் தீர்க்க வேண்டுமென்பதற்காக அரசாங்கம் ஒரு கமிஷன் போட்டு எவ்வளவு பிள்ளைகள் இப்படி அனுதைகளாக இருக்கின்றனர் என்று கண்டறிந்து அவர்களுக்குப் புது வாழ்வு தருவதற்கு—புது நோக்கு கொண்ட நல்ல அரசாங்கம் ஆட்சிக்கு வந்திருக்கிறதே — நீங்கள் கவனிப்பீர்களா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திரு'மதி) சத்திய வாணிமுத்து : இந்த அரசாங்கம் நிச்சயமாக அப்படிப்பட்ட வழிமுறைகளை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய் யும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள் கிறேன். இந்த அரசாங்கம் ஏழை மக்களுக்கு, அவர்களுடைய குழந்தை களுக்கு நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும், அவர்கள் கல்வியறிவு பெற வேண்டுமென்ற நல்லெண்ணத்துடன் தான் இதுபோன்ற அனுதை இல்லங் களுக்கு அதிகப்படியான மானியத்தைக் கொடுத்து வருகிறது.